# தமிழ்ச்சிட்டு



தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

குரல்: 1 இசை: 12

35 காசு



# உங்கள் மடல்கள்

தென்மொழின் தேனிதழே! தமிழின் சிட்டே!
தெளிவுடனே நீ தந்த சீர்மை சான்ற
இன்னலினை இரிந்தோடச் செய்யும் நல்ல
"ஏழைப்பிள்ளைகளாக இருந்தால் என்ன"
என்னுமுயர் தலைப்பதனைக் கற்றுவந்தே
என்றனுயர் மாணுக்க மணிகளுக்கே
நன்றெனவே எடுத்துரைத்தேன் அறிவுக்காக;
நயப்புடனே விழைந்தேற்றுப் பீடு கொண்டார்.

புலவர் வீ வீராச்சாமி, கடலூர்

O 'தமிழ்ச்சிட்டு' கண்டு களிபேறுவகை கொண்டேன். தமிழகத் தம்பி, தங்கையருக்குத் தனித்தமிழ்ப் பற்றை வளர்க்க இவ்வேடு பெரிதும் உதவுமென நினைக்கின்றேன்.

அரு. சுந்தரம், இ. க. (B A.) வெற்றியூர். கல்லல்.

O தங்கள் தமிழ்த்தொண்டு நீண்டு தமிழர்களுக்கு நல்லெழுச்சியை உண்டு பண்ணுவதாகுக. இறைவன் அருள் புரிவாஞக. பள்ளிச் சிறுவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை அமைக்க வேண்டும் என்று தாங்கள் விரும்புவது எத்துணைச் சிறப்பானது என்பதை அறிந்தோர் அறிவர். இயற்கையில் ஈடுபட்டால் உள்ளமோ புள்ளாகும் என்பதும் வெள்ளிடை மலையனறே.

– அ. பொனனையன். புலிகரம்பலூர். முதுகுன்றம்.

O தமிழ்ச் சிட்டைப் படிக்கப் படிக்க ஒவ்வொரு சொல்லும் தேன் சொட்டாய் இனிக்கிறது. இப்படிப்பட்ட சிறந்ததோர் இதழைத் தாங்கள் வெளியிட்டு எங்கள் உள்ளத்தைச் சிறந்ததாக ஆக்குவதைக் குறித்து நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். அவ்வேட்டைப் படிக்கப் படிக்க எனக்கும் எழுத வேண்டும் என எண்ணம் எழுகிறது.

வ. ஞானப்பிரகாசம், முருகேசநகர், கடலூர்.

குமிழ்ச்சிரிப்புச் சிறுவர் எல்லாம்
குவலயத்தில் சிறக்க வென்றே
அமிழ்தொக்கும் கருத்தெல் லாம், நீ
அளிக்கின்ருய் என்னக் கண்டு
தமிழ்போற்றும் உள்ளத் தால்நான்
தமிழ்ச்சிட்டை வாழ்த்து கின்றேன்.
"தமிழ்ச்சிட்டே" பறப்பாய் நன்றே!
தனித்தமிழைப் புரப்பாய் நன்றே!

ச. நாகராசன், அறி. இ; ஆ. ப. அரியலூர், திருச்சி.



# தமிழ்ச்சிட்டு

## தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-1 | தி. பி. ௧௯௯௮ கடகம் (ஆடி) சூலை 67 | இசை-12

# முதல் ஆண்டு

'தமிழ்ச்சிட்டு'க்கு இந்த இதழோடு ஓராண்டு முடிவடைகின்றது. தமிழ்ச் சிறுவர் சிறுமியர் இளம் பருவத்திலிருந்தே தமிழ் மொழியைச் செப்பமாகவும், சரியாகவும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், இளமையிலிருந்தே அவர்கள் தமிழ்ப் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் ஊறித் திளைக்க வேண்டும் என்பதற்காகவும், கல்விக் காலத்திலிருந்தே அவர்களுக்கு உண்மையான அறிவெழுச்சியை ஊட்ட வேண்டும் என்பதற்காகவுமே தமிழ்ச்சிட்டு தோற்றுவிக்கப்பெற்றது. மொழிச் செப்பமே கருத்துச் செப்பத்திற்கு அடிப்படை. கருத்துச் செப்பமே நடத்தைச் செப்பத்திற்கு அடிப்படை. நடத்தை செப்பமாக இருந்தால் வாழ்வும் செப்பமாக இருக்குமன்றோ? தனிப்பட்ட ஒவ்வொருவர் வாழ்வும் செப்பமாக அமைந்து விட்டால், மக்கள் குலமே செப்பமாகச் சிறந்து விளங்குமன்றோ. இப்பெரிய நோக்கத்திற்கு அடிப்படையாகத் தமிழ்ச்சிட்டு தன்னளவில் – தன்னால் முடிந்த அளவு தொண்டு செய்து வருகின்றது.

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்:- பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

தொடங்கிய இரண்டாவது மாதத்திலேயே தமிழ்ச்சிட்டு மும் மடங்காகப் பெருகியது. தமிழ் நாட்டில் உள்ள எல்லா ஊர்களின் சிறுவர் சிறுமியர்களின் கைகளுக்கெல்லாம் தமிழ்ச்சிட்டு போய்ச் சேரும்படி, அவ்வளவு விரிந்த அளவில் வளரவில்லையாயினும், ஏறத் தாழ எல்லா நகரங்களுக்கும், பெரிய ஊர்களுக்கும் தமிழ்ச்சிட்டு வருகிறது. இஃது, எல்லா ஊர்களில் உள்ள கடைகளிலும், எல்லா மாணவர்களின் கைகளிலும் வந்து கிடைக்கும்படி செய்வது ஆங்காங் குள்ள தமிழன்பர்களின் – ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

பொதுவாக, தமிழ்ச்சிட்டு போன்ற ஒரு கொள்கை இதழ் தொடங்கப் பெறுவதே நம் நாட்டில் அரிய செயலாகும். அது நிலை யாகத் தொடர்ந்து நடத்தப்பெறுவது அதனினும் அரிய செயலாகும். தன்னையே அழித்துக் கொள்ளத் துணிந்த ஒருவர் தவிர, இத்தகைய இதழ்களைத் தொடங்கவும், தொடங்கிப் பல இன்னல்களை அடை யவும் வேறு எவரும் முன்வரார். வாய்ப்பந்தல் போடும் ஒரு சிலர் தவிர, உண்மையாகத் தாளிகைத் துறையில் ஈடுபட்ட அனைவரும் இதன் தொல்லைகளையும் பொறுப்புகளையும் உணர்வர்.

தமிழ்ச்சிட்டையும் இதற்கு முன்னோடியாகவுள்ள தென்மொழி யையும் நடத்திவர நாம் அரும்பாடு படுகின்றதை உண்மையுள்ளம் கொண்ட ஓரிருவர் தவிரப் பிறர் அறியார். பெரியோர்களுக்கென்று நடத்தப்பெறும் தென்மொழியும், சிறுவர்களுக்கென்று வெளியிடப் பெறும் தமிழ்ச்சிட்டும் தமிழகத்தில் பெருகப் பெருகத் தமிழர்களுக்கு உண்மையான தாய்மொழிப் பற்றும், தமிழ்மொழி அறிவும், தமிழ் நாட்டுப் பற்றும், உலகியல், அறிவியல் அறிவும் வளரும் என்பது மறுக்க முடியாத உண்மை. இவ்விரண்டு இதழ்களையும் தொடர்ந்து படித்தவர்கள் இதைத் தெளிவாக அறிவர். அப்படி அறிந்தவர்களில் ஒரு சிலர் இவ்வறிவுப் பணிக்குத் துணை நின்று தந்நலத்தைப் பெரி தாகக்கருதாமல் ஓரளவு பாடுபடுவார்களானால், நாம் தொடங்கிய இப்பணி எவ்வளவு விரைந்து பயன்தரும் என்று கூறத்தேவை யில்லை.

தமிழ்ச்சிட்டைப் படிக்கின்றவர்களின் தொகை நாளுக்கு நாள் மிகுகின்றது. தமிழ்ச்சிட்டுக்கு நாள்தோறும் வரும் எண்ணற்ற மடல்கள் இதை மெய்ப்பிக்கும். தமிழ்ச்சிட்டு மாணவர்களிட

மிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும், கல்விக்கூடத் தலைவர்களிடமிருந்தும், பொதுநல ஊழியர்களிடமிருந்தும் பெறுகின்ற வாழ்த்துமடல்களுக்கோ அளவில்லை. அத்தனை மடல்களையும் வெளியிட முடியவில்லை என்பதே எங்கள் வருத்தம். அவர்கள் எல்லார்க்கும் என் அன்பு கனிந்த நன்றி உரியதாகுக.

இனி, தமிழ்ச்சிட்டு சிறுவர் சிறுமியர் எதிர்பார்க்கும் அளவுக்குப் படங்களுடனும், கிழமையிழதாகவும் வெளிவரவில்லை என்பது எங்களுக்கும் வருத்தம் தரும் செய்தியே. ஆனால் பிற இதழ்களைப் போல் மதன்மொழிக்கும், தமிழ்ச்சிட்டுக்கும் எந்த வகையிலும் ஆக்க நலன்கள் இல்லை. முதலீடும் இல்லை. இரவு பகலாக, ஓய்ச்சல் ஒழிவின்றி, திறந்த உடம்புடனும் மைதோய்ந்த கைகளுடனும், வெயிலுக்கும் மழைக்கும் காப்பளியா அச்சகத்திலும் வீட்டிலும் இருந்து கொண்டு, நான்—தனித்த நான் – எதிர்காலத்தில் வைத்த அசைக்க முடியாத நம்பிக்கையுடனும், உள்ள உறுதியுடனும், தென்மொழியையும் தமிழ்ச்சிட்டையும் தொடர்ச்சியருமல் வெளியிட்டு வருவதையே எனக்கு இப்பொழுதுள்ள எல்லாக் கடமைகளிலும் மிகச்சிறந்த கடமையாகக் கருதுகின்றேன். என் உடலில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கும் வரை, என் உணர்வில் மானம் ஊற்றுக் கொண்டுள்ள வரை, என் உள்ளத்தில் நம்பிக்கை காழ் கொண்டுள்ள வரை, தமிழன்னைக்கு என் வாழ்வையே அன்ருடம் மாலைகளாகச் சூட்டிக் கொண்டிருப்பேன்.

வளர்கின்ற பொழுது தமிழ்ச்சிட்டு வளரட்டும். பரவுகின்ற பொழுது தமிழ்ச்சிட்டு பரவட்டும். படிக்கின்ற பொழுது தமிழர் இதைப் படித்துக் கொள்ளட்டும். நினைக்கின்ற பொழுது இதைப் பற்றித் தமிழர் நினைக்கட்டும். ஆனால் அதுவரை ஆடிக் கொண்டிருக்கும் என் சுண்டு விரலின் அசைவைக்கூட எவரும்—எந்த வல்லவரும் ஒரு சிறிது நேரம் – ஒரு நொடிப்பொழுது தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை, என்பால் சுட்டுவிரலை நீட்டிக் கொண்டிருக்கும் எல்லாருக்கும் நினைவூட்டிக் கொள்கின்றேன். வாழ்க தமிழ்ச்சிட்டு! வளர்க இந்நாட்டு இளைஞர் குமுகாயம்!

—பெருஞ்சித்திரன்.

# இரண்டு மடல்கள்

O தனித்தமிழ் புலவர்களுக்குத்தான் புரியும் பேசத் தெரியும் என்ற வெற்றுரையைப் பொய்யாக்கிவிட்ட பெருமை தமிழ்ச்சிட்டையே சாரும். அறியாமை நோயை அகற்றி அறநெறியில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி. கயல்விழி காட்டி, தாய்முகம் நோக்கிச் சிரித்து மலரும் சேய்போல், ''தமிழ்ச்சிட்டை''க்கண்டு சிரித்து மலரும் எங்களைப் பெற்றோர் கண்டு பாராட்டி பூரிப்படைகின்றனர். இனி, கலப்புத் தமிழைக் கேட்டாலே உள்ளம் கசக்கும்; பேசுவோரைக் கண்டாலே முகம் புளிக்கும்; தனித்தமிழைக் கேட்கவே நெஞ்சு இனிக்கும்; பேசுவோரைக் கண்டாலே முகம் சிரிக்கும் தங்களின் தமிழ்ப் பணி மேலும் உயர நாங்கள் என்றென்றும் துணை புரிவோம். மேலும் வினுவிடைப் பகுதியைத் தொடங்கி ஐயப்பாடுகளை அகற்றுமாறு வேண்டிக் கொள்கிறோம். தமிழ்ச் சிட்டைக் கிழமை இதழாக்க வேண்டுமென்று பலர் வேண்டிக் கொண்டிருந்தும் வாளாயிருக்கிறீர்கள். தமிழ்த்தாயின் தாள பணிந்து தங்களின் பணி மேலும் உயர வேண்டிக் கொள் கிறோம்.

சி. பூ. மணி, எம். 66 சுதந்திர நகர்.
சீராம்புரம் அஞ்சல் பெங்களூர்—உக.

## "சிட்டின் பெருமை"

O எத்திசையும் புகழ் மணக்கும் எந்தமிழை இசைத்திடும் எந தமிழ்ச்சிட்டே! எங்கள் அகம் குளிரத் தமிழிசையூட்டிய நீ ஓராண்டை எய்திவிட்டாய். சர்க்கரைப் பொங்கல் இனிப்பதிலும் நீ எங்கட்கு ஊட்டும் தனித்தமிழ் இனிப்பது உண்மையிலும் உண்மை. இவ்வோராண்டில் தாங்கள் தமிழன் என்ற உணர்வுடன் நீ அளித்த அந்தத் தனித்தமிழ்ச் சோற்றை உண்டு களித்தோம். இனி மீண்டும் உன்னிடம் ஒன்றை வேண்டுகின்றோம். இனிவரும் ஒவ்வொரு திங்களின் இசையிலும் திருக்குறளின் ஓரிரு அதிகாரங்களையும், அவற்றிற்கான தனித் தமிழ் உரையினையும் எங்கட்குத் தந்தருள்வாய் தமிழ்ச்சிட்டே! இவ்வாய்ப்பினை எங்கள் வேண்டுதற் கிணங்கி இசைத்திடுவாய் என வழிமேல் விழிவைத்து நோக்குவதுடன் உனக்கு எங்கள் ''திருவள்ளுவர் குழுச்''சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். வணக்கம்.

வீர. செம்பியன், திருவள்ளுவர் குழு, புதுவை-7.

# இவ்வுலகம் சுற்ருமல் நிற்குமானுல்...!

இவ்வுலகம் உருண்டை என்றும், இது மணிக்கு 5,700 கற்கள் விரைவில் தன்னைத்தானே சுற்றிக் கொள்வதுடன், நொடிக்கு $18\frac{3}{4}$ கற்கள் ( மணிக்கு 67,500 கற்கள் ) விரைவுடன் கதிரவனையும் சுற்றி வருகின்றது என்றும் உங்களுக்குத் தெரியும். இஃது இவ்வாறு ஆண்டு ஒன்றுக்கு 59,17,05,000 கற்கள் கதிரவனைச்சுற்றிப்பயணம் செய்கின்றது.

இவ்வுலகம் திடீரென்று தன்னைத்தானுக சுற்றிக் கொள்ளாமல் நின்று போகுமானுல், இதன் மேலுள்ள மரம், செடி, கொடி, மலை, உயிர்கள் முதலிய எல்லாப் பொருள்களும் வெப்பமடைந்து உடனே தீப்பிடித்து எரியும். கடல், ஆறு, ஏரி, குளம், கிணறு முதலிய வற்றில் உள்ள நீரெல்லாம் விரைந்து ஆவியாகப் போகும், இதற்குள் இவ்வுலகம் கதிரவனை நோக்கி விரைந்து இழுக்கப்படும். இவ்வாறு இழுக்கப்பட்ட 65-ஆவது நாளில் கதிரவன் மேற்பரப்பில் போய் விழுந்து ஒளி ஆவியில் கலந்து விடும்.

இதேபோல் நிலவு தன்னைத்தானே சுற்றிக் கொள்வதை நிறுத்திக் கொள்ளுமானுல், சரியாக 5-ஆம் நாளில் நம் உலகத்தின் மேல் வந்து விழுந்து விடும். O

---

# திரவிட மொழிகள்

திரவிட மொழிகளில் ஒன்ருகிய மலையாளம் கி. பி. 1650இல் தான் தமிழிலிருந்து மிகத் தெளிவாகப் பிரிந்து போனது. அவ்வாண்டில்தான் அம்மொழிக்கு ஆரிய எழுத்தை வகுத்தும், பெருவாரியாய் ஆரியச் சொற்களையும் விகுதிகளையும் புகுத்தியும், சேரநாட்டு மொழியைச் சிதைத்தும் துஞ்சத்து எழுத்தச்சன் என்பவர் அதற்கு மொழி இலக்கணம் வகுத்தார்.

பிறிதொரு திரவிட மொழியாகிய கன்னடம் தன் தாய் மொழியாகிய தமிழினின்று கி. பி. ஆரும் நூற்ருண்டில்தான் தனியாகப் பிரிந்து போயிற்று

தெலுங்கு மொழியோ கடைக்கழகக் காலம் வரையில் கொடுந்தமிழாயும் தமிழின் கிளை மொழியாயுமிருந்து அதன் பின்னரே வடமொழிக்கலப்பால் தனி மொழியாகப் பிரிந்தது. தமிழகத்திற்கு வடக்கே உள்ளதால் தெலுங்கு மொழிக்கு வடுகு என்று கடைக்கழகக் காலத்தமிழர் பெயரிட்டிருந்தனர்.

துளு மொழி கி. பி. 16ஆம் நூற்ருண்டிற்குப் பின்னரே தனி மொழியாகப் பிரிந்து போனது. துளுவிற்குத் தனி எழுத்தும் பழைய இலக்கியமும் இல்லை. கன்னட எழுத்தும் மலையாள எழுத்தும் கலந்தே துளு எழுதப்பட்டு வருகின்றது. O

# கதிரவனைச் சுற்றிவரும் கோள்கள்

முற்காலத்தில் கதிரவனைச் சுற்றிவரும் கோள்கள் 7 என்று எல்லா நாட்டவரும் நம்பி வந்தனர். நம் நாட்டிலோ அறிவன், வெள்ளி, செவ்வாய், வியாழன், காரி, இவற்றுடன், கதிரவனையும், நிலவையும் சேர்த்துத் தெரிகின்ற கோள்கள் ஏழு என்றும், இராகு கேது என்ற தெரியாக் கோள்கள் இரண்டு என்றும் ஆக மொத்தம் கோள்கள் ஒன்பது என்றும் கூறிவந்தனர்.

அதன்பின் மேலைநாட்டு அறிவியலார் உரேனசு, நெப்தியூன், புளூட்டோ முதலிய கோள்களும் கதிரவனைச் சுற்றி வருகின்றன என்று கண்டு பிடித்தனர். ஆனால் அறிவியல் வளர வளரக் கோள்களின் எண்ணிக்கையும் வளரலாயிற்று. அதன்படி இக்கால் உள்ள அறிவியலறிஞர், சிறியனவும், பெரியனவுமான ஏறத்தாழ 50,000 கோள்கள் கதிரவனைச் சுற்றி வருவதாகக் கூறுகின்றனர். ஆனால் இதுவரை ஏறத்தாழ 1600 சிறு கோள்களைப் பற்றியே மிகத் தெளிவான விளக்கங்கள் அறியப்பட்டுள்ளன. அச்சிறு கோள்களில் சில 300, 400 கற்கள் விட்டங்கள் கொண்டனவாயும், சில $1\frac{1}{4}$, 2 கற்கள் விட்டங்கள் கொண்டனவாயும் உள்ளன என்று கண்டு பிடித்துள்ளனர். அவற்றுள் மிகவும் பெரியதான ஒன்று 481 கற்கள் விட்டம் கொண்டதாம். ஆனால் இவ்வாறு இதுவரை கண்டு பிடிக்கப்பட்டனவும்–கண்டு பிடிக்கப்படாதனவுமான சிறு கோள்களின் மொத்த நிறை, நாம் வாழும் உலகத்தின் மொத்த நிறையில் ஆயிரத்தில் ஒரு பங்கே.

## நாம் பெறும் நிலவு வெளிச்சம்!

முழுநிலா நாளில் நிலவு வெளிச்சம் மிகவும் ஒளி பொருந்தியதாக இருக்கின்றது இல்லையா? ஆனால் அது நமக்குப் பகலில் கிடைக்கும் கதிரவன் வெளிச்சத்தில் 4,40,000 மடங்கில் 1 பங்கே ஆகும்.

---


## உங்களுக்கொரு பரிசு !

தம்பி தங்கைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் தமிழ்ச்சிட்டுக்கு ஐந்து மாணவர்களை உறுப்பினராக்கினால் உங்கள் பெயருக்கு ஓராண்டிற்குத் 'தமிழ்ச்சிட்டு' இலவசமாக அனுப்பப்படும். எங்கே! இன்றே ஐந்து உறுப்பினர் தொகை உருபா பத்தையும் ஆறு முகவரிகளையும் அனுப்பி வைத்து இலவசமாகத் தமிழ்ச்சிட்டைப் படியுங்கள்.

—அமைச்சர், தமிழ்ச்சிட்டு, கடலூர்–1.


---

# எங்கள் பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டோம்.

பெங்களூர்–21, சீராமபுரம், சேவாச்சிரமம், 7–ஆம் வகுப்பு
'இ' பிரிவு மாணவர்கள் மாற்றிக்கொண்ட பெயர்கள்:

| முன்னைய பெயர் | மாற்றிய பெயர். |
| --- | --- |
| ம, நாருயணசாமி | செழியன். |
| கு. பழனி | அழகரசன். |
| வே. விஜயன் | வே. எழிலரசன். |
| இரா. பிச்சாண்டி | பனம்பாரன் |
| ம. கண்ணம்மா | கண்ணகி. |
| வீ. ராஜேந்திரன் | நாகிளநம்பி. |
| கு. குப்பன் | இடைக்காடன். |
| கு. குப்பம்மாள் | கயல்விழி. |
| ம. மகி | எழிலோவியம் |
| ந. எல்லப்பன் | இளம்பரிதி: |
| ல. கிருட்டிணன் | வலம்புரி. |
| வெ. மணி | தமிழ்த்தும்பி. |
| வே. பன்னீர் | நெடுமாறன். |
| இ. இராஜு | அழகண்ணல். |
| அ. சின்னசாமி | முகில்வண்ணன் |
| அ. ம. பச்சையப்பன் | செங்கதிர் |
| கண்ணப்பன் | இளவழுதி |
| சுகுணா | அழகி |
| கிருட்டிணவேணி | கருங்குழலி |
| அண்ணுமலை | சீராளன் |
| நருயணமூர்த்தி | நக்கீரன் |
| நாகம்மா | தமிழாயி |
| சின்னம்மா | தமிழரசி |
| சங்கரன் | தூயமணி |
| இராசேந்திரன் | செங்குட்டுவன் |
| சுப்பன் | தாளாளன் |
| கணேஷன் | எழில்மாறன் |
| மாணிக்கம் | ஒளிர்மணி |
| கருப்பையா | மாலிறையன் |
| மரியசெல்வன் | சித்தையன் |
| பார்த்தா | எழில்நாச்சி |
| கு. குப்பன் | இடைக்காடன் |
| கு. குப்பம்மாள் | கயல்விழி |

## விராலிமலையில் பெயர் மாற்றம் செய்து கொண்ட மாணவர்கள் பட்டியல்

| | |
|---|---|
| ச. சோமசுந்தரம் | மதியழகன் |
| சு. குமரேசன் | குமரவேல் |
| ந. முனியய்யா | பொழிலன் |
| ப. நடராசன் | மன்றவாணன் |
| கு. வெங்கட்ராமன் | எழிற்சிலம்பன் |
| மு. ஞானசேகரன் | அறிவுமணி |
| ம. ஆறுமுகம் | வேல்வென்றி |
| இ. தங்கராசு | பொன் வேந்தன் |
| சுப. அருணசலம் | கவின்மலை |
| வெ. பெ. இராசேந்திரன் | மன்னர்மன்னன் |
| மா. பரமசிவம் | இறைக்குருவன் |
| மு. சச்சிதாநந்தன் | மகிழரசன் |
| மு. செயராமன் | வெற்றிச்செல்வன் |
| ப. இராமலிங்கம் | எழிலேந்தி |
| செ. சண்முகசுந்தரம் | எழில்வடிவன் |
| ம. அய்யனர் | சேயோன் |
| சு. நாராயணன் | காரிக்கண்ணன் |
| இரா. கிருட்டிணன் | குழலன் |
| ச. இராசு | சேந்தன் |
| து. வெங்கட்ராமன் | பூங்குன்றன் |
| அர. அங்குசாமி | கலையண்ணல் |
| செ. மா. பெஞ்சமின் சோசப் | எழில்மாறன் |
| பெ. சுப்பையா | குறிஞ்சிவேந்தன் |

புதுவை-4

## அரசு உயர் நிலைப்பள்ளியில் உள்ள திருவள்ளுவர் குழு வாணவர்கள் மாற்றிக்கொண்ட பெயர் வரிசை

| | |
|---|---|
| வீ. நாகராசன் | வீ. நா. அறவாழி |
| தி. நாராயணன் | தி. நா. செழியன் |
| ப. கிருட்டினமூர்த்தி | ப. கி. ஒளியரசன் |
| ச. கோபாலகிருட்டினன் | ச. இளம்வழுதி |
| ன. பிரேமநாதன் | து. அன்பரசன் |
| க. லிங்கசாமி | க பூங்குன்றன் |
| சு. சின்னசாமி | சு. இசைமணி |
| கு. ஆறுமுகம் | கு. மணிமாறன் |




# மழை யின்பம்

**ம. இலெ. தங்கப்பா.**

வாராய் தம்பி, வாராய் – வான்
மழையில் நனேவோம் வாராய்!
பாரைக் காக்கும் அன்னே, பாராய்
பசுங்கை நீட்டி அழைப்பாள், வாராய் (வாராய்)

வட்ட வானில் எட்டுத் திக்கும்
வளேத்த முகிலின் பந்தல் பாராய்!
இட்ட பந்தல் கால்போல் மாரி
இனிதாய் ஒழுகும் அழகைப் பாராய்! (வாராய்)

வானின் இன்பக் கண்ணீர் மாரி!
வானப் பொழிலில் உதிர்பூ மாரி!
தேனின் அடையில் ஒழுகும் வாரி!
தீந்தமிழ் வள்ளல்; உலகின் பாரி! (வாராய்)

செயற்கை வாழ்வின் புன்மை காட்டும்
சிறுமை ஆடை களேந்தே எறிவாய்!
இயற்கை அன்னே அழைத்தல் கேளாய்
இனிதாம் அவளின் அன்பில் தோய்வாய்! (வாராய்)

மழைத்துளி உடலில் படுதல் இன்பம்;
மழைநீர் நாவால் பருகல் இன்பம்;
மழைவெள் ளத்தை அளேதல் இன்பம்
மழைகாண் தம்பீ! மாயும் துன்பம். (வாராய்)

கோழை மக்கள் மழையைக் கண்டால்
குந்தி முடங்கி வீட்டுள் கிடப்பார்
வாழ்வின் நுண்சுவை அறியா மாக்கள்!
வறியர் அவரைச் சிரித்துச் சிரித்தே (வாராய்)

# மூட ஆமை



துரை. மாணிக்கம்

குளம் ஒன்றில் ஆமையும்
கொக்கு இரண்டும் வாழ்ந்தன!
குளத்தில் தண்ணீர் வற்றவே
கூடி மூன்றும் வருந்தின.

அண்டை ஊரில் உள்ளதோர்
அழகுக் குளத்தை நாடியே
இரண்டு கொக்கும் போகவே
எண்ணி முடிவு செய்தன.


அதனைக் கண்ட ஆமையும்
அழுதே, "அண்ணன் மார்களே
இதனை விட்டுப் போகவே
எனக்கும் உதவி செய்யுங்கள்;


நன்மைக் கால முற்றிலும்
நட்புச் செய்து வாழ்ந்தவர்,
துன்பம் கண்ட போதிலே
துறந்து போதல் இல்லையே!"–

என்று கூறி வேண்டவே
இரண்டு கொக்கும் அதனிடம்
"நன்று நன்று; தம்பியே!
நாங்கள் பறந்து செல்லுவோம்!

நீயும் வருவ தெப்படி?
நெடுந்தொலைவும் ஆனதே!
காயும் வெய்யில் கருக்குமே!
கண்கள் இருண்டு போகுமே!"–

என்று கூறிக் கொக்குகள்
இரண்டும் வருந்தி நாளெல்லாம்
ஒன்று கூடி ஆய்ந்தன!
உளவு ஒன்று கண்டன!





''ஆமைத் தம்பி! உன்னையே
அழைத்துப் போவ தென்னிலோ,
ஊமைபோல், இக் குச்சியை
உன்றன் வாயால் பற்றிக்கொள்!

குச்சி முனைகள் இரண்டையும்
கௌவிப் பறந்து செல்லுவோம்!
உச்சி வானில் செல்கையில்
உன்றன் வாயைத் திறப்பையேல்


தரையில் வந்து வீழுவாய்;
தவிடுபொடி ஆகுவாய்;
மறந்தி டாதே" என்றன.
''மறவேன்'' என்ற(து) ஆமையே!

குச்சி ஒன்றைக் கொணர்ந்தன.
கௌவிக் கொண்ட(து) ஆமையும்!
உச்சி வானில் பறந்தன!
ஊரார் நின்று பார்த்தனர்!

சிறுவர் கைகள் கொட்டியே,
சிரித்துக் கூச்சல் போட்டனர்.
துறுதுறுத்த ஆமையும்
தூக்கிச் செல்லும் நண்பரை,

''கீழே இரைச்சல் ஏன்''எனக்
கேட்க வாயைத் திறந்ததும்,
வீழ்ந்து நொறுங்கிப் போனதே!
வீணில் உயிரைத் துறந்ததே!

முத்தோர் சொல்லைக் கேட்டிடா
மூட ஆமை இறந்ததே!
காத்துக் கொள்ளல் வேண்டுமே,
கடமை,அடக்கம் இரண்டையே!



# பயனுள்ளவை பத்து

1. உலகில் 1 மணி நேரத்திற்கு 8400 மக்கள் மிகுதியாகின்றனர்.

2. அமெரிக்காவில் 371 பெரும் செல்வர்கள் இருக்கின்றனர். அவர்களின் ஆண்டு வருமானம் 40,400,00,000 உருபா. வருமான வரி 163,50,00,000 உருபா.

3. ஒரு பெண்ணின் தலையில் $1\frac{1}{2}$ இலக்கம் மயிர்கள் உள்ளன. 3' நீளமுள்ள ஒரு பெண்ணின் கூந்தலை ஒன்றோடொன்று ஒட்ட வைத்தால் $83\frac{1}{4}$ கல் தொலைவு வரும்.

4. அமெரிக்காவில் உள்ள அலாசுகாவிற்கும், உருசியாவில் உள்ள சைபீரியாவுக்கும் இடையில் உள்ள கடல் 1813-ஆம் ஆண்டு குளிர் காலத்தில் உறைந்துவிட்டது. அதன் மீது நடந்தே உருசியா சென்றார் பார்னம் என்ற அமெரிக்கர்.

5. பெண்களின் தலையில் குத்திக் கொள்ளும் ஊசி முதலியன செய்ய ஆண்டுக்கு 1 கோடி கல்லெடை எ∴கு செலவாகிறது.

6. கதிரவனுக்கும் நமக்கும் இடையில் உள்ள தொலைவு ஏறத்தாழ $9\frac{1}{4}$ கோடி கற்கள்.

7. உலக உருண்டை நிமையத்திற்கு 950 கல் விரைவில் தன்னைத்தானே சுற்றிக் கொள்கிறது. கதிரவனை நிமையத்திற்கு 555 கல் தொலைவில் சுற்றுகிறது.

8. உலக உருண்டையின் குறுக்களவு 3963 கற்கள். சுற்றளவு 25,000 கற்கள். பரப்பளவு 19,65,50,000 ச. கற்கள்.

9. மாந்தரின் நெஞ்சாங்குலை (இதயம்) 1 மணி நேரத்தில் 360 பதினம் (இலிட்டர்) குருதியை வெளியேற்றுகிறது.

10. 'மாண்ட்ரியல்' நகரில் நடைபெறும் 'உலகக் கண்காட்சியில் 40,000 ச. அடியில் $2\frac{1}{4}$ கோடி உருபா செலவில், 'மான்சிங் இராணா, என்பவரால் இந்திய அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.


---

இரா. வ. சனார்த்தனம், பள்ளிநேலியனூர்.

# ஒருமணி நேரப் பயணம்

## ஒருமணி நேரத்திற்குக் கீழுள்ள உயிர்களைப் பந்தயம் விட்டால்.........

| | |
|---|---|
| நத்தை: | $17\frac{3}{4}$ அடி ஊர்ந்து போகும். |
| ஆமை: | $264\frac{1}{2}$ அடி நீந்தும். |
| மீன்: | 2 கல் (மைல்) 1 படைச்சால் (பர்லாங்) 263 அடி நீந்தும். |
| மாந்தன்: | 3 கல் 618 அடி நடப்பான். |
| குதிரை: | 3 கல் 6 படைச்சால் 545 அடி நடக்கும் (அல்லது) 7 கல் 6 படைச்சால் 418 அடி ஓடும். |
| ஈ: | 11 கல் 1 ப. சா. 314 அடி பறக்கும். |
| முயல்: | 40 கல் 3 ப. சா 76 அடி ஓடும். |
| பருந்து: | 53 கல் 3 ப. சா. 337 அடி பறக்கும். |
| வேட்டை நாய்: | 55 கல் 7 ப. சா. 260 அடி பறக்கும். |
| புகைவண்டி (விரைந்து போனால்): | 62 கல் 2 ப சா. 409 அடி ஓடும். |
| மகிழுந்து (Pleasure Car) (விரைந்து போனால்): | 105 கல் 5ப. சா 51 அடி ஓடும். |
| காற்றில் ஒலி: | 745 கல் 5 ப. சா. 168 அடி போகும். |
| நாம் வாழும் புவி, வானவெளியில்: | 5700 கற்கள் போகும். |




# 9. பரிபாடல்

பரிபாடல் என்பது ஒருவகை இசைப்பாட்டின் பெயராகும். இப்படிப்பட்ட எழுபது பரிபாடல்களைக் கொண்ட நூலுக்கும் பரிபாடல் என்றே பெயர் வழங்கலாயிற்று. அந்நூலில் முருகன், திருமால், காடுகிழாள் (கொற்றவை) ஆகியோர் பற்றியும் வையை ஆற்றைப் பற்றியும் பாடப் பெற்றுள்ளன.

இதன்கண் காதலைப்பற்றிய அகத்துறைப் பாடல்களும் பெருமிதம் பற்றிய புறத்துறைப் பாடல்களும் இருக்கின்றமையால் இந்நூல் இரண்டு துறைக்கும் உரிய பொதுவான நூலாகும்.

பரிபாடலைப் பற்றிய ஒரு பழைய பாட்டாலும், வேறுசில நூற்குறிப்புகளைக் கொண்டுமே நாம் இந்நூல் எழுபது பாடல்களுடையது என்று தெரிந்து கொள்ளுகின்றோம். ஆனால் நூல்வடிவில் நமக்குக் கிடைத்திருப்பவை இருபத்திரண்டு பாடல்களே யாகும். மேலும் பழைய உரைகளிலிருந்து இரண்டு முழுப்பாடல்களும் சில அடிகளும் கிடைத்துள்ளன.

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் பாடியவரின் பெயர், இசையமைத்தவரின் பெயர், இசையின் பெயர் ஆகியவை குறிப்பிடப் பெற்றுள்ளன. இந்நூலைத் தொகுத்தவர் பெயரும் தொகுக்கச் செய்தவர் பெயரும் தெரியவில்லை.

நல்லந்துவனார், இளம்பெருவழுதியார், கடுவன் இளவெயினனார், கரும்பிள்ளைப்பூதனார், கீரந்தையார், குன்றம்பூதனார், கேசவனார், நப்பண்ணனார், நல்லச்சுதனார், நல்லழிசியார், நல்லெழினியார், நல்வழுதியார், மையோடக் கோவனார் ஆகிய புலவர்கள் பாடிய பாடல்கள் கிடைத்துள்ளன. இப்பாடல்களுக்குக் கேசவனார், நல்லச்சுதனார், கண்ணகனார், கண்ணன்நாகனார், நன்னாகனார், நாகனார், பித்தாமத்தர், பிட்டன் நாகனார், மருத்துவன் நல்லச்சுதனார் ஆகிய இசைவாணர்கள் இசையமைத்துள்ளனர்.

எட்டுத்தொகை நூல்களில் கடவுள் வாழ்த்து வடிவில் பெரும் பகுதி யமைந்துள்ள நூல் இப்பரிபாடல் மட்டுமே யாகும். சிலை (மார்கழி)த் திங்களில் மகளிர் அம்பா என்னும் நீர்விளையாட்டு விளையாடுவது பற்றி இந்நூல் குறிப்பிடுகின்றது. இந்நூலில் வையையைப் பற்றி நல்லந்துவனார் பாடிய பாட்டில் மடங்கல் (ஆவணி) மாதம், அவிட்டம் விண்மீன் கூடிய நாளில் மதிமறைவு (சந்திரகிரகணம்) நிகழ்ந்ததென்று குறிப்பிடுகின்றார். இதுகொண்டு வானநூல் ஆராய்ச்சியாளர்கள் இந்நிகழ்ச்சி தி. பி. 192-இல் நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்று கருதுகின்றனர். O

---

## வடமுனை, தென்முனை வீடுகள்.

நாம் குடியிருக்கும் வீட்டின் நான்கு சுவர்களும் பெரும்பாலும் நான்கு திசைகளில் இருக்கும் அல்லவா? நாம் இந்நில வுருண்டையில் எந்தப் பகுதியில் ஒரு வீட்டைக் காட்டினாலும் அவ்வீட்டின் நான்கு பக்கச் சுவர்களும் நான்கு திசைகளையேதான் காட்டிக் கொண்டு நிற்கும். ஆனால் நாம் இந் நிலவுருண்டையின் வடக்கு முனையிலும் தெற்கு முனையிலும் ஒவ்வொரு வீட்டைக் கட்டியிருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது அவ்வீடுகளின் நான்கு சுவர்களும் எந்த எந்தத் திசைகளை நோக்கியிருக்கும் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

சட்டென்று விடையைக் கூறிவிடாமல், ஆழ்ந்து எண்ணிப் பார்த்து விடையைச் சொல்லுங்கள். தெரியாவிட்டால் 24-ஆம் பக்கம் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

# உலகத்திலே
# மெல்லிய பொருள் !

சிறுவர்களே! நாம் வெறுங் கண்களால் பார்க்கக் கூடிய பொருள் களில் மிக மிக மெல்லிய பொருள் எஃது என்று கேட்டால் என்ன விடை சொல்வீர்கள்? சிலர் நுண்ணிய தலை மயிர் என்பீர்கள்; சிலர் பஞ்சுத்துகள் என்பீர்கள். சிலர் சிலந்தி வலையின் இழை என்பீர்கள்; இன்னும் சிலர் மெல்லிய தசைத்தோல் என்று சொல்லலாம். வே று சிலர் நீர்க்குமிழியின் மென்சுவர் என்று சொல்வார்கள். சிலர் நுண் ணுயிர்கள் எனலாம். இல்லை; இல்லை. இல்லவே இல்லை.

நாம் கண்களால் காணும் அனைத்துப் பொருள்களிலும் மிக மெல்லிய பொருள் வழலை(சோப்பு) நீர்க்குமிழியின் மென்சுவர் தான்.

ஒரு பொருளை 200 மடங்காகப் பெருக்கிக் காட்டும் பெருக்காடி (Lence) கொண்டு பார்ப்போமானால், அதில் நாம் மெல்லியது என்று கூறும் ஒரு சிறு மயிர் நாம் எழுதுகின்ற கரிக்கோல் (Pencil) அளவு பெரிதாகத் தெரியும். பஞ்சுத்துகள் கரும்பலகை மேல் எழுதும் கற் கோல் (Slate Pencil) அளவு தெரியும். சிலந்தி வலையோ நூல் போல் தெரியும்; தசைத்தோலின் பருமனோ கரிக்கோலால் போட்ட ஒரு மெல்லிய கோடு போல் தெரியும்; நீர்க்குமிழியின் சுவரே மிக மிக மெல்லியதாக வரைந்த ஒரு கோடு போல்கூட தெரியாது.

ஆனால் ஒரு பொருளை 40,000 மடங்கு பெருக்கிக் காட்டும் ஆற்றல் வாய்ந்த ஒரு பெருக்காடி கொண்டு பார்த்தால்தான் அதில் வழலை நீர்க்குமிழியின் சுவர் ஒரு மெல்லிய கரிக்கோல் கோடு போல் தெரியும்.

இப்பொழுது சொல்லுங்கள். கண்ணுக்குத் தெரியும் உலகப் பொருள்கள் யாவினும் மிக மிக மெல்லியது வழலை (Soap)க் கட்டியின் குமிழிச் சுவர் தான்.

---

## ஒரு நாளைக்கு எத்தனை மணி ?

ஒரு நாள் என்பது எத்தனை மணி நேரம் கொண்டது ? என்று உங்கள் நண்பர்களிடம் கேளுங்கள். அவர்கள் எல்லாரும் உடனே 24 மணி நேரம் கொண்டது ஒரு நாள் என்பார்கள். நாமும் அப்படித்தான் கற்றிருக்கின்றோம் இல்லையா? ஆனால் ஒருநாள் என்பது சரியாக 23 மணி 56 நிமையம் 4 நொடிகள் கொண்டது.

# உடலுறுப்புகளின் சண்டை !

துரைமாணிக்கம்

ஒரு நாள் உடல் உறுப்புகளுக்குள் தங்களுள் யார் பெரியவன் என்ற சண்டை மூண்டது. அவை ஒவ்வொன்றும் தானே பெரியவன் என்று போராடின. இறுதியில் வயிறு அவற்றிற்கு அறிவுரை கூறி அமைதியை உண்டாக்கியது.

கால் !

"உடலைத் தூக்கி நிற்கின்றேன் !
ஓடி ஆடிச் செல்கின்றேன் !
நடையில் லாமல் உழைப்பேது ?
நானே பெரியவன்" என்றது கால் !

கை !

"ஓடி ஆடிப் பயன் என்ன ?
உழைப்பது நானே ! என்றைக்கும்
பாடில்லாமல் வாழ்வேது !
பெரியவன் நானே !" என்றது கை !

கண் !

"உழைப்பது மட்டும் யாராலே ?
ஒளியைப் பெறுவது யாராலே ?
பிழைக்கும் உயிர்க்கே நானேதான்
பெரியவன் என்றே அறிவீரே !"

வாய் !

"உள்ளம் நினைப்பதைச் சொல்கின்றேன்
உலகில் பேசி வெல்கின்றேன் !
மெல்லல், குடித்தல், செய்கின்றேன் !
மேலோன் நானே யாவர்க்கும் !"

மூக்கு !

"பேச்சுப் பேசிப் பயன் என்ன ?
பார்வை காட்டிப் பலன் என்ன ?
மூச்சை இழுத்துத் தருவது யார் ?
மூக்கே என்பதை உணர்வீரே !"

மூளை!

"நல்ல மூச்சும், சுவைப் பேச்சும்,
நன்மை தீமை நோக்குவதும்,
நல்ல பிழைப்பும், நல் உழைப்பும்,
நானே அமைப்பேன் அறிவீரே!"
காலும், கையும், வாய் மூக்கும்,
கண்ணும் மூளையும் இவ்வாறுய்
மேலும் மேலும் பேசிடவே
மிகுவாய்க் களைப்பை அடைந்தனவே!

கால் கை தளர்ந்தது! வறண்டது வாய்!
கண் இருண்டது! உயிர் திணறியது!
மூளை களங்கும் வகையாக
மூண்டது தீப்பசி வயிற்றுள்ளே!

பசியால் வயிறு பேசியது:
''பசி'' எனக் கேட்டால் அன்போடு
''புசி'' என் பானே பெரியவனும்!
''போ'' என் பானே சிறியவனும்!

# அறிவின் அடக்கம்

கிரேக்கர்களுக்கெல்லாம் பொதுவானது டெல்பி என்ற இடத்தில் உள்ள கோயில். கிரேக்கர்கள் குறி கேட்பதில் விருப்பம் உடையவர்கள். இந்த டெல்பி கோயில், குறி சொல்லும் இடங்களெல்லாவற்றிற்கும் மேலானதாகக் கருதப்பட்டது. சாக்ரட்டீசின் மாணவர்களில் ஒருவன், இந்தக் கோயிலுக்குச்சென்று சாக்ரட்டீசைக் காட்டிலும் அறிவுடையவர் வேறு யாரேனும் உண்டா? என்று கேட்டான். 'இல்லை' என்று விடை வந்தது. இதைக் கேட்ட சாக்ரட்டீசு தனக்குள்ளேயே நகைத்துக்கொண்டான். அறிவுக்கு எல்லையேது? இதற்குப் பிறகும் பன்மடங்கு அறிவு, ஆராய்ச்சி பெருகத் தொடங்கியது. 'மற்றவர்கள் அறியாமையிலிருந்தும், தாங்கள் அறிந்தவர்கள் என்று தங்களைக் கருதிக்கொண்டு இருக்கிறார்கள். நானோ, என்னுடைய அறியாமையை அறிந்து கொண்டிருக்கிறேன். இதுதான் மற்றவர்களுக்கும் எனக்கும் உள்ள வேறுபாடு' என்று தன்னுடைய அறிவைப் பாராட்டிப் பேசுகிறவர்களுக்கு அடக்கமாகப் பதில் கூறுவானும் சாக்ரட்டீசு.

— பொற்கொடி.

# -: கலிலியோ :-

—காவனூர் ''மாலிறையன்''

இளந்தமிழ்ச் சிட்டுகளே ! இற்றைநாளில் அறிவியல் முன்னேற்றம் பன்மடங்காய்ப் பெருகி வளர்ந்துள்ளது. மாந்தன் விண் கோள்களுக்குப் பயணம் செய்ய முற்பட்டுவிட்டான். அந்த விண் வெளி ஆய்வுக்கு அடிகோலிய–வழிகாட்டிய, அறிவியலறிஞர் ஒருவரைப்பற்றித் தெரிந்து கொள்ளப் போகின்றீர்கள். அவர்தான் கலிலியோ. அவரின் முழுப்பெயர் கலிலியோ கலிலி.

அறிஞர் கலிலியோ பைசா (Pisa) நகரத்தில் 1564–ஆம் ஆண்டு பிறந்தார். வணிகரான அவரின் தந்தை கலிலியோவுக்கு நற்கல்வி பயிற்றினார். கலிலியோ இளமையாக இருக்கும் பொழுது கிருத்துவக் கோயிலுக்குச் (Cathedral) செல்வது வழக்கம். ஒரு நாள் அக்கோயிலின் மேற்கூரையில் தொங்கிக்கொண்டிருந்த விளக்கு இங்கும், அங்கும் ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டார். அதன் அலைவு தூரத்தை நாடித்துடிப்பால் கண்டறிந்தார். அதன் பின்பே தண்டிணைந்த மணிப்பொறியினைக் (Pendulum Clock) கண்டறிந்தமைத்தனர்.

இளமைக் காலத்தில் கலிலியோ ஓவியம் வரைவதில் ஆர்வம் காட்டினார். அது கணிதத்தில் தேர்ச்சியுற அவருக்கு வழிகாட்டியது. இக்கால் அவர் 25 (ஆண்டு) அகவை நிறைந்த இளங்காளை. அவர் பைசா பல்கலைக்கழகக் கணித ஆசிரியராக அமர்த்தப்பட்டார்.

பின் கல்லூரிப் பேராசிரியராகவும் இருந்தார். அக்கால் அறிவியலறிஞர் அரிசுடாட்டில் (Aristotle) எழுதிய ஒரு கொள்கையை அனைவரும் கண்மூடித் தனமாக நம்பி வந்தனர். இரண்டு வெவ்வேறு எடையுள்ள பொருள்கள் ஒரே உயரத்தினின்றும் வீழ்ந்தால், மிகுந்த எடைப்பொருள் முன்னும் குறைந்த எடைப்பொருள் பின்னும் தரையை அடையும் என்று சொல்லியிருந்தார் அரிசுடாட்டில். இவ் விதியைக் கலிலியோ தவறென்று எண்ணினார். அதனால் கலிலியோ பைசா கோபுரத்தினின்றும் இரண்டு வெவ்வேறு எடைக் கற்களைக்

கீழே விழச்செய்து அவர் கருத்து பிழையென்று உணர்த்தினுர் அதன் பின்பே கலிலியோ கீழ்விழும் பொருள்களைப் பற்றிய மூன்று விதிகளை உணர்த்தினுர். அவற்றை நீங்கள் பள்ளிப்பாடங்களில் பயின்றிருக்கிறீர்களில்லையா !

கலிலியோ குழியாடி, குவியாடி இணைந்த தொலை நோக்கி (Telescope) ஒன்றைக் கண்டறிந்தார். இத்தொலை நோக்கி காணும் பொருளை மும்முறை பெருக்கிக் காட்டும். பின்பு இதனின்றும் முப்பது முறை பெருக்கிக் காட்டும் பெரிய தொலை நோக்கியைக் கண்டறிந்தார். இதனுதவியால் அவர் வியாழன் (Jupiter) விண்கோளையும், அதைச்சுற்றிவரும் நான்கு விண்மீன்களின் இயக்கங்களையும் கண்டறிந்தார். பின் கலிலியோ ஞாயிற்றையும் (Sun) கதிர்ப் புள்ளிகளையும்-பள்ளங்களையும் (Sun spots) கண்டார். அவற்றைக் கொண்டு கதிரவன் நிலத்தைப் போன்றே சுழல்வதையும் ஆனுல் அது 28 நாட்களுக்கு ஒரு சுற்றுமேனி சுழல்வதையும் கண்டறிந்தார்.

அக்கால் கலிலியோ ஐரோப்பாவின் தலைமை அறிவியலறிஞராகத் திகழ்ந்தார். எனவே கலிலியோவுக்குப் பெரும் எதிர்ப்புகள் ஏற்பட்டன. அதுவும் 'பைபிளை'க் குறை கூறியதால் இன்னும் பலர் எதிர்த்தனர். அதனுல் அவருடைய எதிரிகள் கலிலியோவுக்கு எதிராகச் சட்டமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். வழக்குத் தீர்ப்பாளர்களோ அறிவியல் பற்றிச் சிறிதளவு அறிந்திருப்பினும் அவர்களால் கலிலியோவுக்கு ஏற்பாக எதுவும் சொல்லவியலவில்லை. அதனுல் அவர்கள் கலிலியோ சிறை செல்லவேண்டும் அல்லது புவி கதிரவனைச் சுற்றுகிறது என்னும் கொள்கையை விட்டுவிட வேண்டுமென்று தீர்ப்புக் கூறினர். அதனுல் கலிலியோ தம் கொள்கைகளை விட்டு விடுவதாக ஒப்புக்கொண்டாரெனினும் அதன்படி அவரால் ஒழுக அவர் உள்ளம் இடம் தரவில்லை. எனவே எழுபதாம் அகவையில் அவர் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டார். சிறையிலிருந்த போதே அவருடைய கண்ணும், காதும் செயலற்ற நிலையில் 78-ஆம் அகவையில் உயிர்நீத்தார். சில ஆண்டுகள் சென்றபின் அவருக்குப் 'பிளாரன்சு' (Florence) என்னுமிடத்தில் நினைவுத் தூண் எழுப்பினுர்கள் துன்பத்திற்கு அஞ்சாது உண்மையைக் கூறிய பேரறிஞர் கலிலியோ. கலிலியோவின் வரலாறு நமக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக இருக்கட்டும். O

# எல்லாம் உடலைப் பற்றி.........

1. உடலில் உள்ள அகன்ற தசை 'வயிற்றுத்தசை'
2 நீண்ட தசை 'கெண்டைக்கால்' தசை.
3. பெரிய எலும்பு தொடை எலும்பு.
4. சிறிய எலும்புகள் சுத்தி, பட்டை, அங்கவடி எலும்புகள் [நடுச்செவியில் உள்ளன.]
5. நீண்ட நரம்பு 'தண்டுவடம்' [18" நீளம்.]
6. சுரப்பிகளில் பெரியது 'கல்லீரல்'.
7. கையில் மொத்தம் '30' அடுக்கு மெல்லிய தோல்கள் உள்ளன.
8. உகிர்(நகங்)களின் வளர்ச்சி '30' அகவைக்கு மேல் குறைகிறது.
9. நாம் ஒரு நாளில் உட்கொள்ளும் காற்றின் எடை '36' 'இராத்தல்'.
10. நாம் ஒரு நாளில் உட்கொள்ளும் உணவின் எடை '6 இராத்தல்'.
11. நம் உகிர் (நகம்) ஆண்டுக்கு $2\frac{1}{2}$" வளர்கிறது.
12. பெண்களின் தலையில் ஏறத்தாழ '$1\frac{1}{2}$ இலக்கம்' மயிர்கள் இருக்கின்றன.
13. தலைமயிர் ஆண்டுக்கு 16" வளர்கிறது.
14. குருதியில் '90' விழுக்காடு [சதவீதம்] நீர் கலந்துள்ளது.
15. குருதி, நீரைவிட '6' மடங்கு அடர்த்தி மிகுந்தது.
16. இருமலின் விரைவு மணிக்கு '245' கற்கள்.
17. மாந்தனின் முடுக்கிய எண்ண ஆற்றலின் விரைவு மணிக்கு '150' கற்கள்.

18. 'நெஞ்சாங்குலை' [இதயம்] நிமையத்திற்கு '70' முறை அடித்துக் கொள்கிறது.

19. நாம் பிறக்கும் பொழுது '270' எலும்புகளும், இறக்கும்பொழுது '206' எலும்புகளும் உள. மற்ற '64' எலும்புகள் வளரும் பொழுது மற்ற எலும்புகளுடன் இணைந்து விடுகின்றன.

20. உடலின் உயரம் தலையின் அளவைப்போல் '$7\frac{1}{2}$' மடங்கு இருக்கிறது.

21. மாந்தனால் ஒரே நேரத்தில் '1500' வேறுபட்ட ஒலிகளைக் கேட்க முடியும்.

22. நம் நாக்கில் '3000' சுவை நரம்புகள் இருக்கின்றன.

23. மாந்த மூளையின் எடை ஏறத்தாழ '3 இராத்தல்'.

24 மாந்த உடலில் '31' மாழை(உலோக)ப் பொருள்கள் கலந்துள்ளன.

25. நாம் நிமையத்திற்கு '18' முறை மூச்சை உள் வாங்குகிறோம்.

26. நமக்குப் பயன் படாத '180' உறுப்புகள் நம் உடலில் உள்ளன.

27. நம் காதுகளில் ஒலிகளைக் கேட்க 1,00,000 'உயிரணி'கள் உள்ளன.

28. நம் தொண்டையில் '7' தொளைகள் ஒன்று கூடுகின்றன. நடுச் செவிக் குழாய்கள் 2. மூக்குத் தொளைகள் 2. உணவுக் குழல் தொளை 1. காற்றுக் குழாய்த் தொளை 1. வாய்த் தொளை 1.

29. நம் உடலில் '$20\frac{1}{2}$' கோடி இலக்கம் உயிரணிகள் உள்ளன.

30. நாம் சினமடையும் பொழுது '50' தசைகளும், நகைக்கும் பொழுது '13' தசைகளும் இயங்குகின்றன.

---

தொகுப்பு: சனார்த்தனன், கொ. இராமலிங்கம்.

# எலி

எலியண்ணுவே! எலியண்ணுவே!
எங்கே போகிறீர்?
புலியைப் போலப் பதுங்கி நீரும்
எங்கே போகிறீர்?
அரிசிப்பானை அடுக்குப்பானை
நோட்டம் பார்க்கவா?
ஆளில்லாத போதுசென்று
தின்று தீர்க்கவா?
படிப்படியாய் நெல்லைத் தின்று
பதரைச் சேர்க்கிறீர்!
படிக்கும் நல்ல பொத்தகத்தைப்
பாழ்படுத்துறீர்
கொடியிலேறித் துணியை யெல்லாம்
குதறி வைக்கிறீர்!
நொடியிலெல்லாக் கேடும் செய்து
சீர்குலைக்கிறீர்!

கண்ட கண்ட இடத்திலெல்லாம்
வளையைத் தோண்டுறீர்!
பண்டமெல்லாம் திருடி அங்கே
பதுக்கி வைக்கிறீர்!
கண்டவர்தம் உழைப்பிலேயே
காலம் போக்குறீர்!
கண்டுவிட்டால் பூனைதன்னைக்
கதறி ஓடுறீர்!

கட்டு உடல் இருந்தும் மிகுந்த
கரவு நெஞ்மேன்?
கட்டுப்பாடு ஏதுமின்றிக்
கடந்து செல்லுவீர்!
கெட்டியான வட்டமுறுக்கு
பொறிக்குள் இருக்குது!
தொட்டு இழுத்துத் தின்று சுவையை
எனக்கும் சொல்லுவீர்!

**அரி. இல. தமிழடியான்**

# பாவலனும் கொல்லனும்

– "பொற்கொடி"

ஐரோப்பாவில் மிகப் புகழ்பெற்ற பாவலர் ஒருவர் ஒரு கொல்லன் பட்டறை வழியாகப் போய்க்கொண்டு இருந்தார். அப்பொழுது உள்ளே யாரோ பாடிக்கொண்டிருந்தது கேட்டது. பாவலர் உற்றுக் கேட்டார். உள்ளே கொல்லன்தான் பாடிக்கொண்டு இருந்தான். அந்தப் பாட்டோ அந்தப் பாவலரால் எழுதப்பட்டது. அதனை அவன் பல சொற்களைச் சிதைத்தும், மாற்றியும், இசை தவறியும் தன் மனம் போன போக்கில் பாடிக்கொண்டு இருந்தான். பாவலருக்கு மிகுந்த சினம் உண்டாயிற்று. உடனே உள்ளே போய்க் கொல்லனுடைய பட்டறையிலிருந்த பொருள்களையும் கருவிகளையும் தாறுமாறாக மாற்றி வைத்துக் குழப்பமுண்டாக்கத் தொடங்கினார்.

கொல்லன் சினத்துடன்: "நீ யாரடா, பித்துப் பிடித்தவன் போல், என்னுடைய பொருள்களை யெல்லாம் கலைத்து வேலையைக் கெடுக்கிறாய்?" என்றான். "அதனால் உனக்கென்ன?" என்று கேட்டார் பாவலர். "எனக்கென்னவா! அவையெல்லாம் என்னுடைய சொத்து தம்பீ, என்னுடைய உடைமை!" என்றான் கொல்லன்.

அதற்குப் பாவலர், "அது போலவேதான், என்னுடைய பாட்டும். சிறிது நேரத்திற்கு முன்பு நீ பாடிக்கொண்டிருந்தாயே பாட்டு, அதை எழுதியவனும், அதற்குச் சொந்தக்காரனும் நான்தான். நீ எப்படி என்னுடைய பாட்டை மட்டும் தாறுமாறாகக் கலைக்கலாம். எனக்கு அதுதான் உயிர். இனிமேல் நீ சரியாகப் படித்துக்கொள்ளாமல் ஒருவனுடைய பாட்டைக் கொலை செய்யாதே" என்று சொல்லிவிட்டுப் போனார். கொல்லன் தான் செய்த பிழைக்காக வருந்தினான். O

---

## வடமுனை, தென்முனை வீடுகள்.

விடை:- வடமுனையில் உள்ள வீட்டின் நான்கு சுவர்களும் தெற்குத் திசையை நோக்கியே இருக்கும்.

தென்முனையில் உள்ள வீட்டின் நான்கு சுவர்களும் வடக்குத் திசையை நோக்கியே இருக்கும்.

நீங்கள் இந்த விடையைச் சரியாகச் சொல்லியிருந்தால் பிற்காலத்தில் ஓர் அறிவியலறிஞராக நீங்கள் வரக்கூடும். இல்லையெனில் உங்களுக்கு அறிவியல் அறிவு மட்டந்தான்.

# மேலைநாட்டு எழுத்து வேந்தர்களின் வியத்தகு பழக்க வழக்கங்கள்!

— இரா. கண்ணிமை.

மேலைநாட்டு வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும் பொழுது எழுத்து வேந்தர்களைப் பற்றி வியப்பும், மகிழ்வும் நாம் அடைகிறோம். தூவலின் (Pen) வன்மையினைப் பற்றிப் – பலவாறுகச் சொல்வர். தூவல் பிடித்தவர்கள் அளித்துச் சென்றிருக்கும் அறிவுச் செல்வங்கள் பலதரப்பட்டவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையிலே மாந்த வளர்ச்சிக்கும், மன அமைதிக்கும் உறுதுணை புரிந்து வருகின்றது. இந்த நூல்களை யெல்லாம் எழுதிய அறிஞர்கள் என்னென்ன குணங்களைக் கொண்டவர்கள் என அறிய அவா ஏற்படக் கூடும் அன்றோ ?

"பிரஞ்சுப் புரட்சியைப் படைத்த கார்லைல் தாம் முதன்முதலில் எழுதிய கையெழுத்துப் படியைத் தம் நண்பர் சான்சுவேர்டு மூலம் டைலர் அம்மையாரிடம் கொடுத்து வைத்திருந்தார். ஆனால் அந்த அம்மையார் அதைத் தொலைத்துவிட்டார். அதனால் கார்லைல் கலங்கினரிலர். பல திங்களில் மிகுந்த உழைப்பின் பயனாக-மீண்டும் "பிரஞ்சுப் புரட்சி"யை உருவாக்கினர். அது மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. பழைய சுவடி காணுமற் போனதால் இரண்டையும் — இணைத்து(ஒப்பிட்டுப்) பார்க்க அவரால் இயலவில்லை, எனினும் இவ்வளவு அரிதானதொரு படைப்பை எப்படித்தான் அவர் மீண்டும் நினைவு படுத்தி எழுதினரோ? அவரே கூறுகிருர், "உலகில் சிறந்த அறிஞர் ஆவதற்கு 90 விழுக்காடு மிகுந்த உழைப்பும், 10 விழுக்காடு ஆர்வமும் இருக்கவேண்டும்" என்று.

எழுத்தாளர் சிலர் வேடிக்கையான சூழ்நிலைகளை அமைத்துக் கொண்டும், வியப்பான பழக்கங்களைக் கொண்டும், தங்கள் படைப்புகளை இயற்றியிருக்கின்றனர்.

வேர்ட்சுவர்த் – எப்பொழுதும் தம் தோட்டத்தில் திறந்த வெளியில் – இருந்துகொண்டுதான் பாக்கள் புனைவது வழக்கமாம். பிரடரிக் ஆரிசன் என்ற எழுத்தாளருக்குத் தூவலால் எழுத வராதாம். பறவை இறகையே அதற்குப் பயன்படுத்துவாராம். உலகப்

போரைப் பின்னணியாகக் கொண்டு பல பெரும்பாடல்கள் எழுதியுள்ள "அலிசுடர் மாக்ளீன்" என்பவர் ஒவ்வொரு நாளும் – சரியாக 2000 சொற்கள் மேனி – காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை உணவுக் கூடத்திலேயே உட்கார்ந்துகொண்டு எழுதுவாராம்.

"பால்சக்" என்ற எழுத்தாளரின் போக்கே தனியானது. ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட அளவு சொற்கள் எழுதுவது அவர் வழக்கமாம். அப்படி எழுதுவதற்குக் கற்பனை ஓடவில்லை யென்றால், அந்த அளவு சொற்களைப் பைபிள் அல்லது செய்தித் தாள்கள் – இவற்றிலிருந்தாவது எடுத்து எழுதித் தம் பழக்கத்தை விடாமல் கைக்கொள்வாராம்.

அந்தோணி டிராலப்பி – என்பவர் தனித்தன்மை வாய்ந்தவர். அவரின் வேலைக்காரன் காலை 5 மணிக்கு ஒரு வாளித் தண்ணீரை அவர் முகத்தில் ஊற்றி எழுப்ப வேண்டுமாம். எழுந்து எழுதத் தொடங்கினால் 15 நிமையத்திற்கு 200 சொற்கள் மேனி எழுதிக் குவித்து விடுவாராம். எழுதத் தொடங்கினால் பொழுதை ஒருசிறிதும் வீணாக்கமாட்டாராம். இடம் எதுவானாலும் எழுதிக்கொண்டே இருப்பாராம். பேருந்து வண்டி – புகைவண்டி – ஆகியவற்றில் போகும் பொழுதும் எழுதிக்கொண்டே இருப்பாராம்.

சார்லசு டிக்கன்சு – என்பவர் இரவு நேரங்களில்தான் எழுதுவாராம். மணிகாட்டியை தம் முன்னால் வைத்துக்கொண்டு விரைவு விரைவாக எழுதிக்கொண்டே இருப்பாராம். ஏனெனில் அதை வெளியிடுவதற்காகப் பதிப்பாளர்கள் அவர் வீட்டின் முன்னர் காத்துக்கொண்டிருப்பார்களாம்.

அலெக்சாந்தர் டுமாசு – என்பவர் கட்டுரைகள் எழுதுவதற்குச் சிவப்புத் தாளும், பாடல்கள் எழுத மஞ்சள் நிறத்தாளும், பெருங்கதைகள் எழுத நீலநிறத் தாளும் பயன் படுத்துவாராம். இந்த வியப்பான மாந்தனின் போக்கே தனிமையானது. மேலும் இவர் ஒரு நூலை இயற்றப் பயன்படுத்திய துவலைக்கொண்டு, மற்றொரு நூலை எழுதமாட்டாராம். "ரோனால்டு பேர்பாங்க்" என்ற எழுத்தாளர் எப்பொழுதும் நீலநிறத் தாள்களையே பயன் படுத்தி வந்தாராம். "வால்டர் பேட்டர்" என்ற எழுத்தாளருக்கு தாம் எழுதிய குறிப்புகளை யெல்லாம் வெள்ளைத்தாளில் எழுதி அவற்றை ஒழுங்காக மிசைப் பலகையில் மீது அடுக்கி வைத்துக்கொண்ட பின்தான் எழுத ஓடுமாம்.

'இராபர்ட் பிரட்சச்' என்பவர் தம்முடைய வெள்ளிக் கத்தியினால் ஆக்ச்பார்டு கரையிலிருந்து தம் கையாலேயே வெட்டிக்கொண்டு வரப்பெற்ற கட்டைத் தூவலால்தான் எழுதுவாராம். "பிரிச்ட்லிக்கு" என்பவர்க்குத் தனி அறையில் உட்கார்ந்து அமைதியான சூழ்நிலையில்தான் எழுத முடியுமாம். ஆனால் "பி. சி. வோட் அவுசு" பொது அறையில் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு எவ்வளவு அமைதியற்ற சூழ்நிலையிலும் எழுதிக்கொண்டே இருப்பாராம்.

"கோலரிட்சு" எழுதிய "குப்லர்கான்" என்ற நூல் முழுமையும்-கனவில் கண்டும் – கேட்டதுமாம். அதை அப்படியே நினைவுபடுத்தி எழுதினாராம். பெர்னாட்சாவும், எச். சி. வெல்சும் தாங்கள் எழுதப் போவதை அப்படியே தட்டெழுத்துச் செய்து விடுவார்களாம். வின்சுடன் சர்ச்சில் தம் அறையில் முன்னும் பின்னும் நடந்துக்கொண்டே எழுத வேண்டியவற்றைச் சொல்ல – அதை - அவருடைய சுருக்கெழுத்தாளர் குறிப்பெடுத்துக்கொண்டு தட்டெழுத்து – எடுத்துக் கொடுத்து விடுவாராம். இதைவிட எளிய முறை இல்லையென்றே கூறலாம்.

"சாமச்சட் மோஆம்" என்ற எழுத்தாளர் காற்றோட்டமான அறை, அழகு மிக்க இருக்கைகள், கண்கவர் விளக்குகள், உயர்ந்த வரை தாள்கள் முதலிய ஆரவாரச் சூழ்நிலையில்தான் எழுதுவாராம். இவர் தொடர்ந்து பல அரிய படைப்புகளை அளித்துக்கொண்டே இருந்தார். பெர்ட்ரண்ட் ரசல் எப்போதும் எழுதிக்கொண்டே இருக்கமாட்டாராம். மிகக் கடுமையாக உழைத்து – ஒரு படைப்பை அளித்த பின் சிறிது காலம் ஓய்வு எடுத்துக்கொண்டுதான் மறுபடியும் எழுதுவாராம்.

இராபர்ட்லூயிச் டீவன்சன் மிகவும் நோய்வாய்ப்பட்டுப் பொறுக்கவியலாச் சூழ்நிலையிலும் சில அரிய நூல்களை இயற்றினாராம். அந்த நிலையில் அவர் படைத்த சிறந்த நூல்களில் "வெயிலிமாவின் மடல்கள்" என்ற நூலும் ஒன்றாகும்.

இவ்வாறு எழுத்து வேந்தர்கள் தம் எழுதுகோல்களின் வன்மையால் படைத்துச் சென்ற அரிய பெட்டகங்கள் ஏராளம்! ஏராளம்! முடியுடை வேந்தர்கட்கு எவ்வாறு செங்கோல் சிறந்ததோ அதுபோல எழுத்து வேந்தர்கட்கு எழுதுகோல்தான் சிறந்த செங்கோல் ஆகும்!



# குட்டிக்கதை

## நேர்மையின் பரிசு

ஒரு குன்றின் உச்சியில் முதிர்ந்த கிழவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஏழ்மை நிலையவர். ஒரு நாள் அவர் தம் தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுது பறந்து கொண்டிருந்த ஒரு பறவையிடமிருந்து பச்சைவண்ண இறகு ஒன்று அவருடைய மடியில் விழுந்தது. அம்முதியவர் அதை உடனே எடுத்துப் பறவையிடம் கொடுக்க முயன்றார். ஏனெனில் அவர் தனக்குச் சொந்தமல்லாத எதனையும் வைத்திருக்க விரும்பவில்லை.

அவர் அஃது ஓர் அறிவற்ற செயல் என்பதை அறிந்தவராயினும், மிகவும் நேர்மையானவர். தன் வாழ்வில் கிடைத்தவற்றில் சிலவற்றையாகிலும் உரிமை பாராட்டியிருப்பின் இவ்வளவு மிகுந்த ஏழையாக வாழ வேண்டியிராது. இரவும் பகலும் பறவையைத் தேடி அலைந்தார். ஆனால், விண் முழுவதும் பச்சை வண்ணப் பறவையாகவே இருந்ததால், கையிலுள்ள இறகை இழந்த பறவையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சுற்றத்தினர் பகடி செய்யத்தொடங்கினர். ஒருவர், ''ஐயா! நேர்மையாளரே! பறவை இறகை இழந்துவிட்டது. உறுதியாக இனி இதை அப்பறவை விரும்பாது. இவ்விறகினால் அப்பறவைக்கு ஆவது என்ன?'' என்றார்.

முதியவர், ''பறவை தன் கூடு அமைக்க வாகிலும் பயன்படுத்துமில்லையா?'' என்றார்.

முதியவர் மரத்திலிருந்த ஒரு கிளியைப் பார்த்து ''இவ்விறகு உன்னுடையதா?'' என்றார். அது வளர்ப்புப் பறவை. ''நீ மூப்பு முட்டாள்'' எனக் கீச்சிட்டது. இந்த நிகழ்ச்சியால் வியப்புற்ற முதியவர், ''என்னருமைப் பறவையே, ஏன் என்னைத் திட்டுகிறாய்?'' என்றார்.

கிளி திரும்பவும் ''நீ முப்பு முட்டாள்'' என்று கூறிப் பறந்தது. காரணம் யாதெனில் அதுபேச அறிந்தது இந்த மூன்று சொற்களே ஆகும். முதியவர் வருந்திக் கொண்டிருக்கையில், ஓர் அரசர் படைகள் சூழ யானைமேல் வந்தார். அவர், ''முதியவரே, பறவையின் மொழியை அறிவீரா?'' என்றார்.

முதியவர். ''இல்லை அரசே, அக்கிளியின் சொற்களை நான் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இப் பச்சைவண்ண இறகு அதனுடையதா என அறிய முயற்சி செய்தேன்'' என்றார்.

''ஏன் நீர் அவ்விறகைத் திருப்பிக் கொடுக்க விரும்புகிறீர்?'' என்றார் அரசர்.

''மன்னரே, தனக்குச் சொந்தமல்லாத ஒன்றை வைத்திருப்பது குற்றமாகும்'' என்றார் முதியவர்.

''ஓர் இறகைக் கூடவா?''

''ஆம் தலைவ! ஒரு சிறிய இறகைக் கூட''.

''என்னருமைத் தோழரே, நான் இதுவரை தேடிய நேர்மையான ஒருவர் நீங்கள்தாம். என்னுடைய பெரும்பகுதி வேலைக்காரர்கள், அமைச்சர்கள், அலுவலர்கள் நேர்மையற்றவர்களாய்க் காணப்படுகின்றனர். என்னுடைய அரசாட்சிக்கு நேர்மையான ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தேன். கடைசியில் நான் கண்டுபிடித்ததற்காக பெருமகிழ்ச்சியடைகிறேன். இப்பொழுது முதல் நீங்கள் என்னுடைய முதல் அமைச்சர்'' என்றார் அரசர். முதியவர் பெருமதிப்புடன் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நேர்மையுள்ள நெஞ்சு வேண்டும். நேர்மை தவறாதார்க்கு நீள் புகழ் உண்டு.

எழுதியவர்: துரை-பாலு, ஆசிரியர் கப்பியாம்புலியூர்.

(அடிப்படை: Sunday Standard.)

0

# வீசல்

நந்த-பாண்டியன், பனையடிக்குப்பம்.

வீசல் என்பது பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு சிறு விலங்கு, இஃது உருசியா போன்ற குளிர் நாடுகளில் வாழும். சிறிதாயினும், அவ்வினத்திலேயே மிகக் கொடுமை வாய்ந்தது.

இதன் முதல் உணவு அரத்தமே; ஏனைய விலங்குகளின் குரல் வளையைக் கடித்துப் பீறிடும் குருதியைக் குடிப்பதையே இது பெரிதும் விரும்பும்; இதைக் கண்டால் ஏனைய விலங்குகள் நடுங்கி விடுகின்றன; ஒரு சில முயல்கள் இறந்தும் விடுகின்றன. ஆயினும், இதன் பழக்க வழக்க முறைகள் வியக்கத்தக்கன. இது தன் வளையை மிகவும் தூய்மையாக வைத்துக் கொள்ளும். வளைப்புறத்தே மலங் கழிக்க ஓரிடம் ஒதுக்கிக் கொள்ளும். கண் திறவாத இதன் சிறுகுட்டி களும் அங்குத்தான் மலங்கழிக்கச் சென்று வருமாம்.

இவ்விலங்கு உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாது. யாரேனும் தன்னை நிழற்படம் எடுப்பதை இது கண்டுவிட்டால், மிகுந்த அகமகிழ்ச்சியில் இறந்தும் விடுமாம். குளிர் காலத்தில் இவ்வீசல் விலங்கின் மேலுள்ள மயிர்களடர்ந்த தோல், மயிரோடு வெண்மையாக மாறும், இதைச் செல்வர்கள் அணியாகப் பயன் படுத்திக் கொள்கின்றனர். O

---

## தெரிந்து கொள்ளுங்கள்

O இந்தியாவில் இப்பொழுது மொத்தம் 723 மொழிகள் வழக்கில் இருந்து வருகின்றன.

O ஆந்தையால் தன் விழிகளை அங்கு மிங்கும் அசைக்க முடியாது.

O ஒரு சிப்பியில் முத்து முழு வளர்ச்சியடையப் பதினைந்து ஆண்டுகள் ஆகும்.

O சார்லசு டார்வினின் கூற்றுப்படி மாந்தர்களின் முன்னோடி 'இராமாபிதிகசு' என்ற இனப்பெயர் கொண்ட குரங்குகளாகும்.

O 'கோஃகினூர்' என்ற உலகப் புகழ்பெற்ற காழ(வைர)த்தின் மதிப்பு ஏறக்குறைய இருபது நூறுயிரம் உருபாக்கள்.

O பச்சோந்தி குருடாகிவிட்டால், நிறம் மாற்றும் திறமையை இழந்துவிடும்.

—கோ. இராசாராம், திருச்சி–1.

# எங்கள் ஆசிரியர்

மாணவர்களாகிய நாம் கல்விகற்கும் நேரத்தில் நமக்குக் கல்வி கற்பிக்க ஆசிரியர்கள் பலர் வருகின்றனர். அவர்களில் ஆசிரியர்கள் சிலரே கடைசி வரை நமது உள்ளத்தைவிட்டு நீங்காத நினைவாக அமர்ந்து விடுகின்றனர். அவர்களுள் எனக்குத் தெரிந்த என் ஆசிரியர் ஒருவரைப்பற்றி உங்களுக்கும் கூறுகிறேன்.

நமது அன்றையத் தமிழ்நாடு, மொழி இவற்றைப்பற்றி அடிக்கடி கூறுகிறார் நல்ல அறிவு உரைகளை அடிக்கடி கூறுகிறார். ஒவ்வொரு நாளும் ஓய்வு நேரங்களிலும், மாலை நேரத்திலும் தமிழைப்பற்றிக்கூறி வருகிறார். படக்காட்சி பார்ப்பதை மிகவும் கண்டிக்கிறார். மற்ற மாணவர்களின் உள்ளத்தைக் கெடுக்கும் செய்தித் தாள்களைப் படிக்க வேண்டா என்றும் அதற்குச் செலவிடும் தொகையைத் தமிழ்ச்சிட்டு, தென்மொழி, திருக்குறள் முதலியவற்றை வாங்கச் செலவிட வேண்டும் என்றும் கூறுகிறார்.

இப்படிப்பட்ட அவர் வெண்மையான உடையை எப்பொழுதும் அணிந்து கொள்கிறார். உடல் தெரியும் சட்டையை அவர்போடுவதும் இல்லை. போடுபவர்களைப் போடக்கூடாது எனக்கண்டித்தும் திருத்துகிறார். இவர் உடைதான் வெண்மையென்றால் உள்ளமும் வெண்மைதான் என்பது அவருடன் பழகும் என் நண்பர்களுக்குத் தான் தெரியும்.

கடைசியாக, பெரியவர்களாக இருந்தாலும், சிறியவர்களாக இருந்தாலும் மேடைகளில் பேசுவதை யார் தம்முடைய வாழ்க்கையில் நடத்திக் காட்டுகின்றாரோ அவருடைய கொள்கையைப் பின்பற்றி நடப்பதே நமக்கு நன்மை என்று இவர் சொல்வதும் மட்டுமல்லாமல் அவரே செயலில் செய்தும் காண்பிக்கிறார். இவ்வளவு கூறிய பின்னும் அவர் யார் என்று சொல்ல வேண்டாவா? அவர்தான் எங்கள் ஆசிரியர் திரு. கா. சே. சாத்தப்பிள்ளை அறி. இ; ஆ. ப. (BSC; B. T.) காடுவெட்டி சொந்த ஊர். இருப்பது ஆமூர்.

கி. பிச்சை, 10-ஆம் நிலை
மாவட்ட மன்ற உயர்நிலைப்பள்ளி ஆமூர்.
திருச்சி மாவட்டம்.




சென்ற மாதப் புதிரின் விடை:

குதிரையும், கோவேறு கழுதையும் புறப்பட்ட 9-ஆவது மணியில் 45-ஆவது கல்லில் ஒன்றையொன்று பிடிக்கும்.

இம்மாதப் புதிர் 1:

மன்னன், கண்ணன், வண்ணன், திண்ணன் ஆகிய நால்வரும் ஓர் ஏரியைக் கடக்க நேர்ந்தது. ஏரியில் 60 பதிநூற்றெடை (கிலோ கிராம்) கனத்தை மட்டுமே தாங்கும் படகு ஒன்று இருந்தது. மன்னனும், கண்ணனும் தனித்தனி 30 பதிநூற்றெடை கனம் உள்ளவர். வண்ணனும், திண்ணனுமோ தனித்தனி 40 பதிநூற்றெடை கனம் உள்ளவர். அந்த ஒரு படகின் துணையைக் கொண்டே அந்த ஏரியைக் கடக்க அவர்கள் முயன்றனர். அவர்களால் முடியுமா? எப்படி?

—சி. பூ. மணி, (ஊர் பெயர் தெரியவில்லை)

புதிர் 2:

என் தந்தை கடையிலிருந்து சில வாழைப் பழங்களை வாங்கிக் கொண்டு வந்தார். முதன் முதலில் அவரிடம் நான்தான் போய் நின்றேன். எனவே அவர் அவற்றில் பாதியையும், ஓர் அரை வாழைப் பழத்தையும் எனக்குத்தந்தார். அடுத்தபடி என் தங்கை வந்தாள். அவளுக்கோ மிகுந்திருந்த பழங்களில் பாதியையும், ஓர் அரை வாழைப்பழத்தையும் தந்தார். பிறகு என்தம்பி வந்தான். அவனுக்கும் மீதியிருந்தவற்றில் பாதிப் பழங்களையும், ஓர் அரை வாழைப் பழத்தையும் தந்தார். இறுதியில் தந்தையின் கையில் எஞ்சியிருந்த பழங்கள் 3. அவர் முதலில் எத்தனைப் பழங்கள் கொண்டு வந்திருக்க வேண்டும்? அவர் தனித்தனியே எங்களுக்குக் கொடுத்த பழங்கள் எத்தனை?

—பெ. தனுசுகோடி, போடி-மீனுட்சிபுரம். மதுரை மா. வ.

புதிர் 3:

என்னெதிரே வந்து கொண்டிருந்த ஒரு பெண்ணையும், ஆணையும் பார்த்தபொழுது, அந்தப் பெண்ணிடம் அவளுக்கும் அவனுக்கும் என்ன உறவு என்று கேட்டேன். அதற்கு அவள் "இவனுடைய மாமா, என் மாமாவை மாமா என அழைப்பார்." என்று சொல்லிச் சென்று விட்டாள். அவர்களுக்குள் உள்ள உறவை என்னவென்று உங்களால் சொல்லமுடியுமா?

—கி. உண்ணுமலை. குருகுலம். அமராவதிப்புதூர் (அஞ்).

(விடைகள் அடுத்த இதழில்)



# எங்கள் விருப்பம் என்ன?

O பிறமொழிச் சொற்களுக்கு நேரான தமிழ்ச்சொற்களை தமிழ்ச் சிட்டின் ஒரு பக்கத்தில் வெளியிட்டால், தமிழ்ச்சிறார் அனைவர்க்கும் பயனபடும் என்பது என் எண்ணம். செய்வீர்களா ?

கதிரொளி, பரிவில்லிக்கோட்டை, கோவில்பட்டி.

(தாங்கள் விரும்புமாறு, தமிழ்ச் சொற்களை வகைப்படுத்தி வெளியிட வேண்டுமென்பதும் பிற அமைப்புகளும் எங்கள் கொள்கையே! இருப்பினும் தென்மொழி, தமிழ்ச்சிட்டை இப்பொழுது வெளியிட்டுக் கொண்டிருக்கும் முறையிலிருந்து சிறிதே மாற்றி வெளியிட முயல்வதானாலும், நிறைய பொருளும், ஏந்தும் தேவை. என் செய்ய ? நாம் அந்நிலைக்குத் தேவையான. வளர்ச்சியடையும் வரை, அத்தகைய மாற்றங்களை நினைத்தல் இயலாது. தங்களைப் போன்ற அன்பர்கள் தென்மொழி அலுவலகத்திற்கு ஒருமுறை வந்து போனால், நான் சொல்லுகின்ற அடிப்படை நிலையை நீங்கள் நன்றாக உணர்ந்து கொள்வீர்கள்.

— ஆசிரியர் )

O இருள் படர்ந்து மருள் மலிந்த மடநெஞ்சுடைய மாணவ குழுகாய அறியாமையை நீக்கி உரன் மலிந்தவர்களாக மாற்றிடும் மாத்தமிழ் ஏடாக விளங்குவதுதான் தமிழ்ச்சிட்டும் தென்மொழியும். இவ்வேடுகள் எங்களைப் போன்ற மாணவிகள் உள்ளத்திலே தமிழ மணம் வீசி, அணையா விளக்காக இவ்வுலகத்தில் இலங்க வேண்டுமென இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

மா. தமிழ்ச்செல்வி, இரா. கயல்விழி, காவலர்மறுகு.
அழகாபுரம், சங்கராபுரம்.

O தென்மொழியின் முன்புறத்தட்டையில், தனித்தமிழில் தோன்றுகின்ற பாக்களேபோல், தென்மொழியின் துணை என்று போற்றப்படும் தமிழ்ச்சிட்டின் முன்புற அட்டையிலும், நல்ல கருத்துகள் அமைந்த பாடல்களை வெளியிட்டுத் தமிழ்ச் சிறுவர் நலம் பெறச் செய்ய வேண்டுகின்றேன். தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் பல்லாண்டுகள் தழைத்து வாழ்க!

இரா. அப்பாசி, களையூர். குருவிநத்தம், கடலூர்.

(இந்த எண்ணம் முன்பே எங்களுக்குண்டு. விரைவில் அதை நிறைவேற்றுவோம். – ஆசிரியர்.)

# பயன் மொழிகள்!

- மாணவர்கள் தலையான (சிறந்த) மாணவர்கள், இடைப்பட்ட (நடுநிலையான) மாணவர்கள், கடைப்பட்ட (தாழ்ந்த) மாணவர்கள் என மூன்று வகையினர்.

- சிறந்த மாணவர்கள் எகினம் (அன்னம்) போலும், ஆ(பசு) வைப் போலும் இருப்பார்கள். எகினம் பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தால்,தண்ணீரை விட்டுவிட்டுப் பாலை மட்டும் உண்ணுமாம். அதுபோல் இவர்கள் ஆசிரியர் கூறுவனவற்றுள் பயனுள்ள கருத்துகளை மட்டும் எடுத்துக் கொண்டு பயனற்றவற்றைத் தள்ளிவிடும் பண்புடையவர். ஆ(பசு) ஓரிடத்தில் விரைந்து உண்ட புல்லைப் பிறிதோரிடத்தில் அமர்ந்து மீண்டும் வாய்க்குக் கொண்டுவந்து அசைபோட்டு உண்பதுபோல், இவர்கள் ஆசிரியரிடம் விரைந்து கற்றதைத் தனியே மீண்டும் நினைவிற்குக் கொண்டுவந்து எண்ணி நினைவில் இறுத்திப் பயன் பெறுவர்.

- இடைநிலை மாணவர்கள் நிலத்தைப்போன்றவர். உழுது, தண்ணீர் பாய்ச்சிக் காவல் புரிந்தால் மட்டுமே நிலம் பயன் தருவதுபோல், அழுந்தச் சொல்லி, மீண்டும் மீண்டும் நினைவிற்குக் கொண்டு வரச்செய்தால் மட்டுமே பயன்படுவர். இவர்கள் அப்படிக் கற்ருலும் கிளியைப் போல், கூறியதையே கூறும் திறன் படைத்தவர்கள். ஆசியரிடம் கற்றவை தவிர, தம்முயற்சியால் ஒன்றும் கற்றுக் கொள்ள முயலமாட்டார்கள்.

- தாழ்ந்தவகை மாணவர்கள் ஓட்டைக்குடம், ஆடு, எருமை, நெய்யரி போன்றவர்கள். ஊற்ற ஊற்ற ஒழுகிக் கொண்டே இருக்கும் பொத்தல் குடம் போல், கற்றுக் கொடுக்கக் கொடுக்க மறந்து கொண்டே இருப்பர். ஆடு ஓரிடத்திலும் அமைந்து உண்ணுமல் இங்கொன்றும் அங்கொன்றுமாக மேய்ந்து செல்வதுபோல், இவர்கள் ஓர் ஆசிரியரிடத்திலும் அமைந்து கற்கமாட்டார்கள். எருமை குளத்தின் தெளிந்த நீரை உண்ணுது, அதில் விழுந்து கலக்கிச் சேருக்கி அதன்பின் அச்சேற்று நீரை உண்பது போல், இவர்கள் ஆசிரியர் மனத்தைச் சினமெழக் கலக்கிவிட்டு, அதன்பின் வேண்டா வெறுப்பொடு கற்பிக்கப் படுவனவற்றை, அரையுங் குறையுமாகக் கற்பர். அவ்வாறு கற்பினும் நெய்யரிபோல் நல்லவற்றை ஒழுக விட்டுத் தீயவற்றையே கற்கும் கீழ்மைத் தன்மையர்.

(நன்னூல் பாயிரக் கருத்துகள்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.